**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 708/2022 PW . 1**

| | | | |
|---|---|---|---|
| Name : ராமகிருஷ்ணன் | | Father's Name | : பெரியகருப்பன் |
| Village: | | Taluk | : |
| Age : | | Occupation | : |
| Caste : | | Religion | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2024

**முதலாம் எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு.**

---

**முதல் விசாரணை:**

நான் கானாடுகாத்தானில் வசிக்கிறேன். தபால் அலுவலகத்தில் பணிபுரிந்துவிட்டு தற்போது பணி ஓய்வில் உள்ளேன். சுமார் 7, 8 வருடங்களுக்கு முன்னர் நான் கடைக்கு சென்றுவிட்டு எனது வீட்டிற்கு இரவு 8 மணி அளவில் சென்று கொண்டிருந்தபோது அப்போது வழியில் ஆஜர் எதிரி உட்பட 2 நபர்கள் கடைவீதி அருகே நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை நான் கடந்து செல்ல முயற்சித்தபோது அவர்கள் என்னை கூப்பிட்டார்கள். அவர்கள் மது அருந்த என்னிடம் பணம் கேட்டார்கள். நான் அதற்கு பணம் கொடுக்க முடியாது என்று கூறினேன். அதற்கு அவர்கள் தன் கையில் ஆயுதம் வைத்துள்ளேன். ஆகையால் பணத்தை கொடுக்குமாறு என்னை கட்டாயப்படுத்தினார்கள். அவர்கள் கையில் அருவாள் போன்ற ஆயுதம் இருந்தது. எனக்கு பயமாக இருந்ததால் எனது பையில் இருந்த 300ரூபாயை அவர்களிடம் கொடுத்துவிட்டு அங்கிருந்து நான் சென்றுவிட்டேன். பின்னர் வீட்டிற்கு சென்றுவிட்டு செட்டிநாடு காவல்நிலையம் சென்று நடந்த விபரங்களை கூறி நடவடிக்கை எடுக்குமாறு போலீசாரிடம் நான் புகார் கொடுத்தேன். அந்த புகார் அதசாஆ. 1 ஆகும். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் ஆஜர் எதிரி உட்பட 2 நபர்கள் கொத்தமங்கலம் பகுதியை சேர்ந்தவர்கள் என்று நான் தெரிந்துகொண்டேன்.

குறுக்கு விசாரணை:

இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை புகார் கொடுத்து 2, 3 நாட்கள் கழித்து காவல்நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்து சுமார் அரை மணிநேரம் கழித்து காவல்நிலையத்தில் புகார்கொடுத்தேன். புகாரை நானே கைப்பட எழுதிக்கொடுத்தேன். சம்பவ நடந்த கடை வீதி அரை கி.மீட்டர் வரை இருக்கும் என்றால் சரிதான். புகாரில் எந்த இடத்தின் முன்பு சம்பவம் நடந்தது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தின்போது கடைவீதியில் சுமார் 20 பேர் இருந்தார்கள். அது

இரவு நேரம் என்றால் சரிதான். அந்த நேரத்தில் என்னிடம் யார் பணம் கேட்டது என 2 பேர்கள் இருந்ததால் போதிய வெளிச்சம் இல்லாததால் யார் என சொல்லமுடியாது என்றால் சரிதான். 2பேரும் சப்தம் போட்டு பணம் கேட்டார்கள். ரூபாய் 300 பணத்தை நான் தான் கொடுத்தேன். அதில் மூன்று 100 ரூபாய்கள் இருந்தது.  அந்த பணத்தை நீதிமன்றத்தில் மனு செய்து வாங்கினேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்வதற்கு பிறகு இரண்டு பேரையும் வேறு எங்கேனும் பார்த்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் உள்ள எதிரி சம்பவத்தின்போது இருந்ததாக போலீசார் சொன்னதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தபால் துறையில் வேலை பார்ப்பதால் காவல்துறையினர் எங்கள் தபால் அலுவலகத்திற்கு வருவதால் நல்ல பழக்கம் உண்டு என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் காவல்துறை கேட்டுக்கொண்டதால் பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 708/2022 PW . 2**

Name : கோபால் Father's Name : கிருஷ்ணமூர்த்தி

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2024

**முதலாம் எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு.**

**-----------------------------------------------------------------------------------------------------------**

**முதல் விசாரணை:**

நான் கானாடுகாத்தானில் வசிக்கிறேன். பெட்டி கடை வைத்துள்ளேன். அசா. 1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. தேதி, மாதம் நினைவு இல்லை. 2016ம் வருடம் நான் கடையில் வேலை செய்துகொண்டிருந்தபோது இரவு 7-8 மணியளவில் அசா. 1 எனது கடை வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்போது கடை வாசலில் சற்று கூட்டமாக இருந்தது. அசா. 1 அங்கிருந்த நபர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். மற்றபடி அசா. 1க்கு என்ன நிகழ்ந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் 14.12.2016 அன்று இரவு 7.45 மணியளவில் தான் கடையில் வேலை செய்துகொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு வந்த அசா. 1ஐ ஆஜர் எதிரி உட்பட 2 நபர்கள் கத்தியைக்காட்டி மது அருந்த பணம் கேட்டு மிரட்டியதாகவும் அசா. 1 தனது பையில் இருந்த 300 ரூபாய் பணத்தை எடுத்து கொடுத்ததாகவும் பின்னர் எதிரிகள் அந்த பணத்தை பெற்றுக்கொண்டு சம்பவ இடத்திலிருந்து கிளம்பிவிட்டதாகவும் இதுகுறித்து தான் நேரடியாக பார்த்த சம்பவத்தை விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**CCNo. 708/2022 PW . 3**

Name : சுந்தரம் Father's Name : சின்னைய்யா செட்டியார்

Village: Taluk :

Age : Occupation :

Caste : Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.03.2024

**முதலாம் எதிரி ஆஜர். 2ம் எதிரி இறப்பு.**

---

**முதல் விசாரணை:**

நான் கானாடுகாத்தானில் வசிக்கிறேன். பெட்டி கடை வைத்துள்ளேன். அசா. 1ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. தேதி, மாதம் நினைவு இல்லை. 2016ம் வருடம் நான் கடையில் வேலை செய்துகொண்டிருந்தபோது இரவு 7-8 மணியளவில் அசா. 1 எனது கடை வாசலில் நின்று கொண்டிருந்தார். அப்போது கடை வாசலில் சற்று கூட்டமாக இருந்தது. அசா. 1 அங்கிருந்த நபர்களிடம் பேசிக்கொண்டிருந்தார். மற்றபடி அசா. 1க்கு என்ன நிகழ்ந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன்.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் 14.12.2016 அன்று இரவு 7.45 மணியளவில் தான் கடையில் வேலை செய்துகொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு வந்த அசா. 1ஐ ஆஜர் எதிரி உட்பட 2 நபர்கள் கத்தியைக்காட்டி மது அருந்த பணம் கேட்டு மிரட்டியதாகவும் அசா. 1 தனது பையில் இருந்த 300 ரூபாய் பணத்தை எடுத்து கொடுத்ததாகவும் பின்னர் எதிரிகள் அந்த பணத்தை பெற்றுக்கொண்டு சம்பவ இடத்திலிருந்து கிளம்பிவிட்டதாகவும் இதுகுறித்து தான் நேரடியாக பார்த்த சம்பவத்தை விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.